பிரான்மலை

# (திருக்கொடுங்குன்றம்)

# கல்வெட்டுக்கள்



கல்வெட்டுக்களைப் படியெடுத்து
வாசித்துப் பதிப்பித்தவர்

**கோ. விசயவேணுகோபால்**

பிரெஞ்சு ஆசியவியல் ஆய்வுப் பள்ளி, புதுச்சேரி.
ÉCOLE FRANÇAISE D'EXTRÊME - ORIENT
(French School of Asian Studies) Centre de Pondichéry

ÉCOLE FRANÇAISE D'EXTRÊME-ORIENT



மங்கைபாகர் திருக்கோயில்

பிரான்மலை

(திருக்கொடுங்குன்றம்)

# கல்வெட்டுக்கள்

படியெடுத்து வாசித்துப் பதிப்பித்தவர்

**கோ. விசயவேணுகோபால்**

(முன்னாள் பேராசிரியர், தமிழ்த் துறை,

மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை)

கல்வெட்டியல் ஆய்வாளர், பிரெஞ்சு ஆசியவியல் ஆய்வுப் பள்ளி, புதுச்சேரி

வெளியீட்டாளர்

பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மையம்

மதுரை 2022

# நூல் விளக்கம்


நூலின் பெயர் : பிரான்மலை
(திருக்கொடுங்குன்றம்) கல்வெட்டுக்கள்

ஆசிரியர் : **கோ. விசயவேணுகோபால்**
பிரெஞ்சு ஆசியவியல் ஆய்வுப் பள்ளி
புதுச்சேரி.

உரிமை : பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மையம், மதுரை
பிரெஞ்சு ஆசியவியல் ஆய்வுப் பள்ளி
புதுச்சேரி.

முதற்பதிப்பு : மே 2022

பக்கங்கள் : 216

நூலின் அளவு : 1/4 டெம்மி

விலை : 400/-

அச்சிட்டோர் : அன்னை அருள் மறுதோன்றி அச்சகம்
(MOTHER'S GRACE OFFSET)
புதுச்சேரி - 605 001.
பேசி : 0413 - 2336204 - 05
mothergraceoffset@gmail.com

புகைப்படங்கள் : **பாபு (எ) ந. இராமசாமி**
(நினைவில் வாழும்) **கோ. ரவீந்திரன்**
பிரெஞ்சு ஆசியவியல் ஆய்வுப் பள்ளி
புதுச்சேரி.

ERC - DHARMA ஆய்வுத் திட்ட நிதியுதவியுடன் இந்நூற் பணி மேற்கொள்ளப் பெற்றது


**EFEO**

**École française d'Extrême-Orient**


Dominic Goodall, M.A., DPhil. (Oxon.), Dr. Habil. (Hamb.),
Foreign Corresponding Member of the Académie des Inscriptions et Belles-Lettres,
Head, Pondicherry Centre of the École française d'Extrême-Orient.


## FOREWORD

It is a pleasure to furnish a prefatory note for this important collection of primary epigraphic source-material edited by Professor G. Vijayavenugopal, who has been working in the Pondicherry Centre of the French School of Asian Studies (École française d'Extrême Orient = EFEO) since 1997 and who has therefore been my colleague since I joined him there twenty-two years ago.

Estimates vary, but certainly tens of thousands of premodern Tamil inscriptions are engraved on stelae, rocks and temple walls across the Tamil-speaking South that form an extraordinary archive of South Indian history. And yet, despite the intrinsic interest of this crucial historical material, and despite continuous and concerted institutional efforts beginning in the nineteenth century, most of these primary sources remain unpublished and they tend therefore only to be consulted piecemeal and in small handfuls by particularly eager epigraphists.

Reading such documents requires considerable dedication, for we must be aware of the evolving conventions of the script, of wide linguistic variations across time and space, of a broad framework of political and economic history, and of many unfamiliar modes of presenting information. And acquiring such knowledge in the first place requires years of travelling over every sort of terrain to many sites and poring over graven stones in all weathers and lighting-conditions.

Professor Vijayavenugopal has spent decades in precisely such travels, and he is thus one of only a few energetic persons in the world both able and willing to produce this sort of book and thereby to bring to the attention of historical linguists, philologists, historians and all other interested readers fresh corpora of epigraphical material that they might not otherwise even know about, let alone be able to study.

The scenic hill known today as Piranmalai, which lies in Pandya country between Madurai and Pudukottai, is the site of a sizeable corpus of pre-modern inscriptions. Although the existence of most of them has been noted in the *Annual Reports of Indian Epigraphy* (1903, 1924 and 1968/69), less than half had been published until now. This volume for the first time presents the corpus of the site in print together. The previously published inscriptions have been printed here again, with corrections, as well as the previously unpublished ones, including twenty-two fragmentary inscriptions whose existence had not hitherto been noticed at all. Altogether, this forms a corpus of 100 inscriptions dating from the beginning of the thirteenth century onwards. Each text is briefly characterized, with mention of whether and where it has been noticed or published before, along with regnal information relevant for dating and contextualization. There is also a brief summary of its content. Magnificently legible photographs accompany the editions of most of the epigraphs.

It is by making accessible bodies of primary documents such as these that we may gradually acquire a clearer picture of the Indian past. It was with this in mind that our office, the EFEO, helped to frame and then, in 2019, to launch a project funded by the European Research Council (ERC) under the European Union's Horizon 2020 research and innovation programme (grant agreement n°809994). That project, entitled DHARMA (an acronym for "The Domestication of 'Hindu' Asceticism and the

Religious Making of South and Southeast Asia"), studies religious history in a comparative perspective. But instead of focussing on theological debates and religious ideas and practices recorded in texts transmitted through manuscripts, the project concentrates on institutional religious history, and this necessarily means putting an emphasis also on inscriptions, as well as on material evidence from temples, monasteries and other kinds of archaeological sites.

The Sanskrit word *dharma* can designate the cosmic law that is upheld both by gods and humans. But it is also often used to refer to any of the numerous monastic and temple-related foundations made to support this law. The DHARMA project seeks to understand the process of "institutionalization" of "Hinduism" by investigating the roles of various agents, from kings and noblemen to priests, monks and local communities. The project focuses on the period from the 6th to the 13th century, a period in which the Bay of Bengal served as a maritime highway for intense cultural exchange. The resulting process of "Indianization", marked notably by the spread of "Hinduism", of an Indian writing system, and of Sanskrit, touched large parts of South and Southeast Asia.

A primary goal of the project is to encourage editions of more inscriptions and to help to create an enlarged transregional corpus that is then accessible to readers from different parts of the vast area under study. We are therefore delighted that a part of the work that Professor Vijayavenugopal has been producing in the context of the project is now printed here in this volume by the Madurai-based Pandyan Historical Research Centre.

The wealth of information revealed in this collection of inscriptions should remind us of how important it is to edit the epigraphs noticed fleetingly, but not actually published, in the volumes of the *Annual Report of Indian Epigraphy* (*ARIE*) over the last ten decades. It should remind us too of the importance of actually exploring the sites thoroughly, since it turns out that there are inscriptions — in Piranmalai and in many other sites — whose existence has not been recorded in those volumes, in spite of the diligent efforts of the Archeological Survey of India.

In short, we are grateful to Professor Vijayavenugopal for having brought so many records to light. And we should pay heed to his exhortation to go out in search of the many thousands of such records that still remain to be discovered and examined.

Dominic Goodall,
Pondicherry, June 2022.

dharma

European Research Council

This project has received funding from the European Research Council (ERC) under the European Union's Horizon 2020 research and innovation programme (grant agreement No 809994).

அன்புமிக்க
திரு பாபுக்கு
கொ. விஜய வேணுகோபால்
5.7.2022.

# பொருளடக்கம்

1. வெளியீட்டாளர் குறிப்பு
2. பதிப்பாசிரியர் நன்றியுரை
3. பதிப்பு முன்னுரை
4. பிரான்மலை (திருக்கொடுங்குன்றம்) கல்வெட்டுக்கள்
(புகைப் படங்களுடன் வாசகங்களும் விளக்கங்களும்)

## வெளியீட்டாளர் குறிப்பு

மதுரையை மையமாக வைத்து 2011 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வரும் 'பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மையம் பாண்டிய நாட்டு வரலாற்றுக்கு வேண்டிய அடிப்படைச் சான்றுகளைத் தொகுத்து வெளியிட்டு வருகிறது. முற்றிலும் தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் இதுவரை எழுதப்பட்ட 7 நூல்களை இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. இந்நூல்கள் வரலாற்று ஆய்வாளர்களுக்கும், ஆர்வலர்களுக்கும், மாணவர்களுக்கும் பெரிதும் பயன் விளைவித்துள்ளன. அந்த வரிசையில் எட்டாவது நூலாகப் 'பிரான்மலைக் கல்வெட்டுகள்' என்னும் நூலை வெளியிடுகிறோம். இந்நூலில் மொத்தம் 100 கல்வெட்டுகளின் மூலபாடங்கள் இடம் பெற்றுள்ளன. பிரான்மலையில் அமைந்துள்ளபாடல்பெற்றசிவத்தலமான மங்கைபாகர் கோவிலிலும், வேறு சில சிறு கோயில்களிலும் காணப்படும் கல்வெட்டுக்களும் இத்தொகுதியில் அடங்கியுள்ளன.

இவற்றுள் முக்கியமானது எண் 99 ல் வெளியிடப்பட்டுள்ள வணிகக்குழுவினர் கல்வெட்டு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளது போல இக்கல்வெட்டு விரிவான ஆய்வுக்கு உட்படுத்தப்படவேண்டிய ஒன்றாகும். தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த பெருவணிகர்கள் ஒன்று கூடி எடுத்த முடிவுகளை இக்கல்வெட்டில் காண்கிறோம். தமிழகக்கல்வெட்டுகளில் மிக முக்கியமான கல்வெட்டாக இதனைக் கருதலாம்.

இக்கல்வெட்டுகளைத் தொகுத்து வகைபடுத்தி ஆய்வு செய்து தக்கதொரு ஆய்வு முன்னுரையோடு வழங்கியிருக்கிறார் இந்நூலாசிரியர் மதிப்பிற்குரிய பேராசிரியர் முனைவர். கோ. விஜயவேணுகோபால் அவர்கள். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையிலும், கலை வரலாற்றுத் துறையிலும் தலைவராகப் பணியாற்றிப் பணிநிறைவு பெற்ற இப்பேராசிரியர் தமது பணி ஓய்வுக்குப்பின் புதுச்சேரியில் இயங்கி வரும் 'பிரஞ்சு ஆசியவியல் ஆய்வகத்தில்' சேர்ந்து கல்வெட்டுக்களைப் பதிப்பிக்கும் பெரும்பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். பேராசிரியரை நான் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக அறிவேன். தமிழ் இலக்கணம், வைணவ இலக்கியங்கள் உரைகளில் ஆழமான அறிவு பெற்றவர் இவர். அத்துறைகளிலிருந்து கவனத்தை மடைமாற்றிக் கல்வெட்டுத்துறையில் ஈடுபடுத்தி பல அரும்பணிகளைச் செய்துவருகிறார். அவரது இந்நூலை வெளியிடுவதில் எம் 'பாண்டியநாட்டு வரலாற்று ஆய்வு மையம்' பெருமை கொள்கிறது.

இந்நூலை வெளியிட வேண்டும் என்ற எங்களது விருப்பத்தைப் 'பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மையத்தின்' நிறுவனரும் புரவலருமான தமிழகத் தொழில்துறை, தமிழ் வளர்ச்சி மற்றும் தொல்லியல் துறையின் அமைச்சர் மாண்புமிகு. தங்கம் தென்னரசு அவர்களிடம் தெரிவித்த போது உடனே இசைவினைத் தெரிவித்தார்கள். அவரே ஒரு தேர்ந்த தொல்லியலாளர், கல்வெட்டாய்வாளர், நாணயவியல் அறிஞர், பழம் பொருட்கள் சேகரிப்பு ஆர்வலர் எனக் கூறலாம். பாண்டிய நாட்டின் வரலாற்றுத் தரவுகள் அனைத்தையும் தொகுத்து வெளியிடவேண்டும் எனும் பேரவாக்கொண்டுதான் இம்மையத்தை அவர் துவக்கினார். அவருடைய சீரிய தலைமையாலும் வழிகாட்டுதலாலும் தமிழகத்தொல்லியல் துறை இன்று பல இடங்களில் அகழாய்வுகளையும், அருங்காட்சியகங்களையும் தொடங்கி நடத்தி வருகிறது. அவர் பேராசிரியர் விஜயவேணுகோபால் அவர்களின் பணிகளை நன்கு அறிந்தவர். எனவே நாங்கள் கேட்டவுடன் இந்நூலை வெளியிட இசைவு தெரிவித்தும், பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மையத்தின் வெளியீடாகவே இதனை வெளியிட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். அவருக்கு எங்கள் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம். நூலாசிரியரின் அரிய முயற்சிக்கும் கடின உழைப்புக்கும் எம் நிறுவனம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. இது போன்று பல ஊர்க் கோயில் கல்வெட்டுகளை வெளியிடும் எண்ணம் உள்ளது. தமிழ் கூறும் நல்லுலகம் அளிக்கும் பேராதரவின் அடிப்படையில் எம் எதிர்காலப்பணிகள் விரியும் என்று நம்புகிறேன்.

**சொ. சாந்தலிங்கம்**

செயலர், பாண்டிய நாட்டு வராற்று ஆய்வு மையம்

மதுரை

# நன்றியுரை

ஏழாண்டுகளுக்கு முன்பு என் அன்பு நண்பரும் "மணற்கேணி" ஆய்விதழ் ஆசிரியரும் ஆகிய முனைவர் து. இரவிக்குமார் அவர்கள் (இன்றைய விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர்) சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டத்திலுள்ள பிரான்மலை நல்ல மங்கைபாகர்கோயில்கல்வெட்டுக்களைப் படியெடுத்துத் தரமுடியுமா எனக் கேட்டார். நான் என் இசைவைத் தெரிவித்ததோடு நான் பணியாற்றும் பிரஞ்சு ஆசியவியல் ஆய்வகத்தின் இயக்குநர் முனைவர் தொமினிக் குடால் அவர்களின் அன்பான இசைவைப் பெற்றுப் பிரான்மலைக் கோயில் கல்வெட்டுக்களைப் படியெடுக்க முடிவு செய்தேன். இக்கோயிலையும் வேறு சில கோயில்களையும் பராமரித்து வரும் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தின் குரு முதல்வர் பெருமதிப்பிற்குரிய பொன்னம்பல அடிகளாரும் தம் ஆசியை அருளினார்கள். எங்கள் குழுவிற்குப் பிரான்மலை அடிவாரத்தில் இயங்கி வரும் மேனிலைப் பள்ளித் துணைத் தலைமை ஆசிரியர் திரு. நாச்சியப்பன் அவர்கள் உற்ற துணை வழங்கியதோடு கல்வெட்டுக்களைப் படியெடுப்பதற்கு முன் கல்வெட்டு உள்ள இடங்களைத் தூய்மைப் படுத்தும் பணியில் தம் மாணவர்களையும் பயன்கொள்ள இசைந்தார்கள். பிரான்மலையில் நல்ல மங்கைபாகர் கோயில் மட்டுமின்றி உக்கிரகிரீசுவரர் கோயில், அம்மன் கோயில், பைரவர் கோயில், சுப்பிரமணியர் கோயில், விசுவநாதர் கோயில் எனத் தனித்தனிக் கோயில்களும் மலையின் அடிவாரத்தில் சுப்பிரமணியர் கோயிலொன்றும், ஊர் நடுவில் கணபதியார் கோயிலொன்றும் அமைந்துள்ளன. இவை அனைத்திலும் கல்வெட்டுக்கள் உள்ளன. இவை அனைத்தையும் புகைப்படம் எடுப்பதிலும் படியெடுப்பதிலும் எங்கள் நிறுவனத்தைச் சேர்ந்த (நினைவில் வாழும்) திரு. இரவீந்திரன் அவர்களும் திரு. பாபு என்கிற ந. இராமசாமி அவர்களும் பெரிதும் துணைபுரிந்தார்கள். படியெடுப்பு முடிந்த நிலையில் அவற்றை வாசித்து இறுதி செய்வதிலும் கல்வெட்டுக்களுக்குக் காரணமான சோழ, பாண்டிய, விசய நகர மன்னர்கள் அவர்களின் காலம் முதலானவற்றை முடிவு செய்வதிலுமாகச் சில ஆண்டுகள் கழிந்தன. அச்சுக்கு ஆயத்தம் செய்யும் நிலையில் கொரோனா தொற்று நோய் பணியை முடக்கியது. ஒரு வழியாக இதன் தாக்கம் குறைந்த நிலையில் இதனைப் பதிப்பிப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்ட போது எனது நண்பரும் தமிழகத் தொல்லியல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற நிலையில் பாண்டிய நாடு வரலாற்று ஆய்வு மன்றத்தின் செயலராகவும் பணியாற்றி வரும் முனைவர் சொ. சாந்தலிங்கம் அவர்கள் மதுரை, பாண்டியநாடு வரலாற்று ஆய்வு மையம் சார்பில் இத்தொகுப்பை வெளியிடலாம் என மகிழ்ச்சியுடன் கூறினார். உடனடியாக அவரே இம்மன்றத்தின் தலைவர், தமிழகத் தொழில் மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் மாண்புமிகு தங்கம் தென்னரசு அவர்களின் இசைவையும் பெற்றுத் தந்தார். இவ்வாறாகக் கல்வெட்டுச் சான்றுகள்கொண்ட இந்நூல் தமிழ் கூறும் நல்லுலகிற்கு வருகிறது. இதில் கல்வெட்டு வாசகங்களோடு அவற்றின் புகைப்படங்களையும் இணைத்துத் தந்துள்ளமை குறிப்பிடத் தக்க தொன்றாகும். இதனைச் செம்மையுற அமைத்துத் தந்த திரு. பாபு (எ) ந. இராமசாமி அவர்களுக்கு மிக்க நன்றி.

இத்தொகுப்பினை இருமுறை வாசித்துத் தமது மேலான கருத்துக்களையும் திருத்தங்களையும் வழங்கியவர் எனது கெழுதகை நண்பரும் தமிழ்ப் பல்கலைக் கழக முன்னாள் வரலாற்றுத் துறைத் தலைவரும் எனது வரலாற்று ஆய்வுகளில் வழிகாட்டும் ஆசானுமாக விளங்கும் பேராசிரியர் முனைவர். எ. சுப்பராயலு அவர்கள். அவருக்கு என் நெஞ்சார்ந்த நன்றி.

முதல் முதல் இப்பணியில் என்னை ஈடுபட வைத்துத் தொடர்ந்து ஊக்கப்படுத்தி வந்த அன்புக்குரிய நண்பர், விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர், "மணற்கேணி" ஆய்விதழ் ஆசிரியர் முனைவர். இரவிக்குமார் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி. இப்பணியை மேற்கொள்ளவும் இதனைத் துறை சார்ந்த பணியாக ஏற்கவும் இசைவு தெரிவித்த எங்கள் நிறுவன இயக்குநர் முனைவர் தொமினிக் குடால் அவர்களுக்கு என் அன்பும் நன்றியும். படியெடுக்க அனுமதி அளித்த சைவ ஞானியார் பெருமதிப்பிற்குரிய பொன்னம்பல அடிகளார் அவர்கட்கும் பணிவான நன்றி. நூலை வெளியிட இசைவு தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் திரு தங்கம் தென்னரசு அவர்கட்கு என் மனமார்ந்த நன்றி. பாண்டியநாடு வரலாற்று ஆய்வு மன்றத்தின் செயலர் முனைவர் சொ. சாந்தலிங்கம் அவர்கட்கும் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த புதுச்சேரி மருதோன்றி அச்சக உரிமையாளர் திரு. தனராசன் அவர்கட்கும் என் நன்றி.

தமிழக வரலாற்றில் ஈடுபாடுள்ள ஆசிரியர்கள், ஆய்வாளர்கள், வரலாற்று மாணவர்கள் ஆகியோருக்குப் பயன்தரும் இவ்வடிப்படைத் தரவு நூலைத் தமிழ்கூறும் நல்லுலகம் ஏற்றுப் பாராட்டுமென நம்புகின்றேன்.

**கோ. விசயவேணுகோபால்**

பிரெஞ்சு ஆசியவியல் ஆய்வுப் பள்ளி, புதுச்சேரி.

புதுச்சேரி.

# பிரான்மலை

(திருக்கொடுங்குன்றம்) கல்வெட்டுக்கள்

## பதிப்பு முன்னுரை

தமிழ் நாட்டில் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டத்தில், பிரான்மலை என்ற சிற்றூர் (சிங்கம்புணரியிலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில்) உள்ளது. (இந்தியத் தொல்லியல் கள ஆய்வு நிறுவனம் இங்குள்ள கல்வெட்டுக்களைப் படியெடுத்தபோது இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தில் இருந்தது) இவ்வூருக் கருகில் உள்ள சிறு குன்றின் மீது ஒரு கோயில் உள்ளது. இன்று மங்கைபாகர்கோயில்எனஅழைக்கப்படும் இக்கோயிலில் இந்திய அரசுத் தொல்லியல் கள ஆய்வு நிறுவனம் 1903இல் 18 கல்வெட்டுக்களையும் 1924இல் 45 கல்வெட்டுக்களையும் 1968-69இல் 3 கல்வெட்டுக்களையும் படியெடுத்துள்ளது. இவை முறையே தொல்லியல் ஆண்டறிக்கைகளில் 1903இல் 138-154 எண்களாகவும் 1924இல் 192-236 எண்களாகவும் 1968-69இல் 227-229 எண்களாகவும் பதிவாகியுள்ளன. கோயிலின்பெயர்1903ஆண்டறிக்கையில் மங்கைநாதர் கோயிலென்றும் 1924இல் மங்கைபாகர் கோயிலென்றும் 1968-69 இல் மங்கைநாத சுவாமி கோயில் என்றும் குறிப்பிட்டுள்ளனர். இப்பெயர் மாற்றத்திற்கான காரணத்தை எங்கும் குறிப்பிடவில்லை. ஆக மூன்று முறை படியெடுக்கப்பட்ட நிலையில் மொத்தம் 66 கல்வெட்டுக்கள் ஆண்டறிக்கையில் குறிப்புக்களுடன் உள்ளன. இவற்றுள் 18 கல்வெட்டுக்கள் மட்டுமே தொகுதி 8இல் (எண்கள் 424-442) அச்சில் வந்துள்ளன. படியெடுத்தும் அச்சில் வராதவை 48. தற்போதைய ஆய்வில் 35 கல்வெட்டுக்கள் புதியனவாகக் கண்டறிப்பட்டுள்ளன. இவற்றுள் முழுக் கல்வெட்டுக்கள் 13, ஏனைய 22 துண்டுக் கல்வெட்டுக்கள். இப்பதிப்பில் மொத்தம் 100 கல்வெட்டுக்களின் வாசகங்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் (நினைவில் வாழும்) டி.வி. மஹாலிங்கம் அவர்கள் தம்முடைய பதிப்பான "தமிழ் நாடு-கேரள மாநிலங்களின் இடவாரியான கல்வெட்டுக்கள் அட்டவணை" *(A Topographical List of Inscriptions in the Tamilnadu and Kerala States)* என்ற நூலில் திருப்பதூர் வட்டத்தில் உள்ள கோயில்களுள் பிரான் மலைக் கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் பற்றிய குறிப்புக்களை இந்தியத் தொல்லியல் துறையினரின் ஆண்டறிக்கைகளில் தந்துள்ள குறிப்புக்களை அடியொற்றி 35 கல்வெட்டுக்களுக்கு மட்டும் (**Rn.526** முதல் **Rn.559** வரை) குறிப்புக்கள் தந்துள்ளார். இவற்றின் தன்மைகளை ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளேன்.

குன்றக்குடி ஆதீன மடத்தின் சார்பாகத் தஞ்சை, கரந்தை, பழம்பொருள், கல்வெட்டு ஆராய்ச்சியாளர் (நினைவில் வாழும்) சி. கோவிந்தராசனார் அவர்கள் இக்கோயில் கல்வெட்டுக்களைப் பார்வைப் படியெடுத்து விளக்கமுடன் கைப்பிரதியாக மடத்திற்கு வழங்கியுள்ளார். (தவத்திரு குன்றக்குடி அடிகளார்-தனது நூலகம், குன்றக்குடி - எண் 1193) இதில் மொத்தம் 20 முழுக் கல்வெட்டுக்களும் 7 துண்டுக் கல்வெட்டுக்களும் அவரெழுதிய குறிப்புக்களுடன் உள்ளன. இப்பணி எப்போது மேற்கொள்ளப்பட்டது? எப்போது இவைமடத்திற்கு அளிக்கப்பட்டன? என்ற விவரங்கள் அறியக் கூடவில்லை. இவ்வறிக்கையில் இந்தியத் தொல்லியல் துறையினர் வெளியிட்டுள்ள 1903ஆம் ஆண்டறிக்கையில் குறிப்பிட்டு அச்சில் வந்த கல்வெட்டுக்கள்-*ARE138, 139, 140, 141, 142A, 142B, 143, 144, 148, 149, 150, 151, 152, 153, 154 (16)* ஆகியன உள்ளன. ஆண்டறிக்கை 1924இல் குறிப்பிட்டுள்ள கல்வெட்டுக்கள்-*ARE 194, 199, 200, 203, 216, 227, 231* ஆகியன 7உம் என மொத்தம் 23 கல்வெட்டுக்களின் கைப் படிகள் உள்ளன. இவற்றுள் 1903ஆம் ஆண்டறிக்கையில் உள்ள கல்வெட்டுக்கள் - அஃதாவது எண் 140, 149 ஆகியவற்றை இருமுறை தந்துள்ளார். இதனைக் கழித்த நிலையில் மொத்தம் 21 கல்வெட்டுக்களின் கைப் படிகளே இவர் கையேட்டில் உள்ளன. ஏனைய கல்வெட்டுக்களை ஏன் விட்டுவிட்டார் என்பதற்கான காரணம் தெரியவில்லை. இந்தியத் தொல்லியல் கள ஆய்வுத் துறையினரும் இவரும் படியெடுத்த காலத்தே இருந்த கல்வெட்டு ஒன்று இன்று கோயிலில் காணக்கிடைக்கவில்லை. இது பைரவர் கோயில் மேற்குச் சுவரில் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (முதலாம் சடையவர்மன் வீர பாண்டியன் கல்வெட்டு (காலம்: பொஆ 1264)

இந்தப் பின்னணியில் நாங்கள் பிரான் மலைக் கோயிலில் படியெடுத்தபோது முன்னைய முயற்சிகளில் படியெடுக்காமல் விடப்பட்ட 13 கல்வெட்டுக்கள் இனங் காணப்பட்டன. மேலும் எங்கள் ஆய்வில் 22 துண்டுக் கல்வெட்டுக்கள் புதியனவாகக் கண்டறிப்பட்டுள்ளன. இவற்றை ஆண்டறிக்கையில் உள்ள குறிப்புகளோடு ஒப்பிடுகையில் 66 கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்ட நிலையில் 1903இல் படியெடுத்த 18 கல்வெட்டுக்கள் தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் தொகுதி 8இல் அச்சிடப்பட்டுள்ளன. இந்நூலில் இதுவரை அச்சில் வந்த கல்வெட்டுக்கள் (திருத்தங்களோடும்) அச்சில் வராத கல்வெட்டுக்கள், புதியனவாக இனங் காணப்பட்ட கல்வெட்டுக்கள் ஒருசேர அச்சிடப்பட்டுள்ளன. இவ்வகையில் மொத்தம் 100 கல்வெட்டுக்கள் விளக்கங்களுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டு ஆண்டறிக்கையில் குறிப்பிட்டுள்ள கல்வெட்டு உள்ள இடங்கள், அரசர் ஆட்சியாண்டுகள், கல்வெட்டுச் செய்திகள் ஆகியவற்றில் சில பிழைகளும் வேறுபாடுகளும் உள்ளன. இவை ஆங்காங்கே சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

### நூலில் கல்வெட்டுக்கள் அமைந்துள்ள முறை

ஒவ்வொரு கல்வெட்டும் எந்த இடத்தில் உள்ளது என்பது முதலில் தரப்பட்டுள்ளது. அடுத்து இக்கல்வெட்டு ஏற்கனவே இந்தியத் தொல்லியல் கள ஆய்வுத் துறையினரால் படியெடுக்கப்பட்டுக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் விவரங்கள் தரப்பட்டிருப்பின் அவை தரப்பட்டுள்ளன. இவற்றில் ஏதேனும் மறுபாடு/கள் இருந்தால் அது/வையும் குறிப்பிடப்பட்டுள்ளது/ன. இது போலவே வேறு ஆய்வு அறிக்கையில் கல்வெட்டு குறித்த தகவல்கள் இருந்தால் அவையும் தரப்பட்டுள்ளன. இதன் பின்னர்க் கல்வெட்டு/கள் ஏற்கனவே அச்சாகியிருப்பின் அந்த விவரங்களும் தரப்பட்டுள்ளன.

ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்ட கல்வெட்டு அச்சிடப்படாத நிலையில் இருப்பின் "முதன்முறையாக வாசகம் வெளியிடப்படுகிறது" என்ற குறிப்பு இருக்கும். இதுவரை அறியப்படாது எங்கள் ஆய்வில் அறியப்பட்டவை 'புதியது" எனக் குறிப்பிடப்பட்டிருக்கும். மேலும் தேவையான சில குறிப்புக்களும் இங்கு இடம் பெற்றிருக்கும்.

இதன் பின்னர்க் கல்வெட்டு வெளியிட்ட அரச மரபினர், அரசனின் பட்டப் பெயர், அரசனின் இயற்பெயர், ஆட்சியாண்டு, இதற்கு இணையான பொது ஆண்டு ஆகியன தரப்பட்டுள்ளன. கல்வெட்டு விளக்கும் தகவல்கள் செய்தி என்ற தலைப்பின் கீழ்த் தரப்பட்டுள்ளன. இவற்றிற்குப் பிறகு கல்வெட்டு வாசகம் தரப்பட்டுள்ளது. மேலும் தேவையான குறிப்புக்களும் கீழே தரப்பட்டுள்ளன.

### கல்வெட்டுக்கள் குறிப்பிடும் அரசர்கள்

#### பாண்டியர்

கிடைக்கும் கல்வெட்டுக்களுள் பெரும்பான்மையானவை பாண்டிய அரசர்களின் கல்வெட்டுக்கள். இவற்றுள்

காலத்தால் முந்திய கல்வெட்டுக்கள் (எண் 1,2) முதலாம்சடைய வர்மன் குலசேகர பாண்டியன் காலத்தவை (பொஆ 1196).

**முன் வரலாறு[1]**

பாண்டியர்களுக்கும் இலங்கையை ஆண்ட சிங்கள மன்னர்களுக்கும் மணஉறவு உண்டு. அதே போல் பாண்டியர்களுக்கும் சோழர்களுக்கும் தொடர்ந்து பகைமை உண்டு. இதனால் இவர்களுக்கிடையே தொடர்ந்து போர்கள் நடந்த வண்ணம் இருந்தன. சோழர்கள் சில போது பாண்டியர்களை ஆதரித்தும் வந்துள்ளனர். ஆனால் சோழர்கள் எப்போதும் சிங்களவர்களை எதிர்த்தே வந்துள்ளனர். இலங்கை மன்னன் பராக்கிரம பாகுவின் உடன்பிறந்தாளை மானாபரணன் என்பான் மணந்தான். இவனுடைய மகனே ஸ்ரீ வல்லபன். இவன் இலங்கை மன்னனாக விரும்பியபோது பராக்கிரம பாகு இவனைச் சிறையிட்டதோடு பெரிதும் அவமானப்படுத்தினான். காலப்போக்கில் இலங்கையிலிருந்து பாண்டி நாடு திரும்பிப் பொஆ 1158 முதல் 1185 வரை முதலாம் சடையவர்மன் ஸ்ரீ வல்லபன் என்ற பெயரில் ஆட்சி செய்தான். இவன் பொஆ 1185இல் இறந்தான். இவனுக்குப் பின் இவனது மகன் மாறவர்மன் விக்கிரம பாண்டியன் பட்டத்திற்கு வந்தான். எனினும் இவனுக்கும் இவன் தம்பி வீரபாண்டியனுக்குமிடையே போட்டி நிலவியது. விக்கிரம பாண்டியன் சோழன் மூன்றாம் குலோத்துங்களின் உதவியை நாட, அவன் வீரபாண்டியனையும் உதவிக்கு வந்த சிங்களர்களையும் போரில் தோற்கடித்து விக்கிரம பாண்டியனை மதுரை அரசனாக்கினான். இது நடந்தது பொஆ 1186இல். இவனுக்குப் பின் பட்டத்திற்கு வந்தவனே முதலாம் சடையவர்மன் குலசேகரன். இவன் ஆட்சி பொஆ 1190 முதல் 1218 வரை நிகழ்ந்தது. இக்கால கட்டத்தே பாண்டியர் தங்கள் பெயரில் கல்வெட்டுக்களை வெளியிட்டு வந்தாலும் சோழ அரசனின் கீழ்த்

---

[1]பார்க்க : ***K.A. Nilakantha Sastri, The Pandyan Kingdom from the Earliest Times to the Sixteenth Century, Luzac, 1929;*** ந. சேதுராமன்-பாண்டியர் வரலாறு-(கிபி 550-1371), முதற் பதிப்பு, டிசம்பர் 1989, கும்பகோணம்.

---

திறை செலுத்தியே வந்துள்ளனர். இந்நிலையில் தன் தந்தைக்கு உதவிய மூன்றாம் குலோத்துங்கனுக்குக் குலசேகர பாண்டியன் திறை செலுத்த மறுத்தான். இதன் காரணமாக மூன்றாம் குலோத்துங்க சோழன், மதுரை மீது படை தொடுத்து மதுரையை அழித்தான். போரின் முடிவில் குலசேகரன் மனைவி மக்களோடு சரணடைந்தான். மூன்றாம் குலோத்துங்கன் அவனை மன்னித்து மரியாதைகள் செய்தனுப்பினான். இவனுடைய கல்வெட்டுக்கள் இரண்டு பிரான்மலைக் கோயிலில் காணப்படுகின்றன. இவையே பிரான் மலையில் காணப்படும் காலத்தால் முந்தைய கல்வெட்டுக்கள்.

அடுத்து நாம் காண்பது மூன்றாம் குலோத்துங்களின் 35ஆம் ஆண்டுக் கல்வெட்டு. இவன் குலசேகரனை அரியணையில் அமர்த்திய செய்தியை முன்பு கண்டோம். இவன் பாண்டியரோடும் இலங்கை மன்னர்களோடும் போர் புரிந்து வெற்றி பெற்ற நிலையில் தன் பெயருக்கு முன் ஈழமும் மதுரையும் கொண்ட என்ற பட்டத்தைச் சூடிக் கொண்டான். இப்பட்டப் பெயர் முதன் முதலாக இவனுடைய 11ஆம் ஆண்டைச் சேர்ந்த திருக்கண்ணபுரம் கல்வெட்டில்[2] காணப்படுகிறது. ஆனால் பிரான் மலையில் காணப்படும் 35ஆம் ஆண்டுக் கல்வெட்டில் (பிரான் மலையிற் காணப்படும் சோழர் காலத்திய கல்வெட்டு இது வொன்றே) இப்பெயர் காணப்படவில்லை. கல்வெட்டும் முற்றப் பெறவில்லை. இதன் காரணத்தை மேலும் ஆராய வேண்டும்.

அடுத்துக் காணப்படுவன முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் கல்வெட்டுக்கள். (4-10) இவற்றுள் ஒன்று மெய்க் கீர்த்திப் பகுதி மட்டும் கொண்டுள்ளது. கல்வெட்டுக்களின் பிற்பகுதிகள் என்னவாயின எனத் தெரியவில்லை. முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் பொஆ 1216 முதல் 1244 வரை பொன்னமராவதியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தவன்[3]. மூன்றாம் குலோத்துங்க சோழன் பொஆ1218இல் இறந்த நிலையில் சோழ நாட்டின் மீது படையெடுத்து உறையூர். தஞ்சை போன்ற சோழர் நகரங்களை எரியூட்டினார். சோழரின் முக்கிய நகரமான ஆயிரத் தளியில் வீராபிடேகம் செய்து[4] கொண்டான். இதனால் இவன் தன்னைச் "சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டியன்" என அழைத்துக் கொண்டான். பின்னர் ஆட்சி யிழந்த சோழ மன்னன் மூன்றாம் இராசராசனுக்கு மீண்டும் ஆட்சி யுரிமை வழங்கினான். இதனால் தன்னைச் "சோணாடு வழங்கியருளிய சுந்தர பாண்டியன்" என் அழைத்துக் கொண்டான்[5], "சோணாடு வழங்கியருளிய" என்ற பட்டம் பிரான் மலைக் கல்வெட்டிலும் உள்ளது. சோழ நாட்டின் பிற பகுதிகளிலும் இவன் கல் வெட்டுக்கள் காணப்படுதலால் சோழர் பகுதிகள் பாண்டியர் ஆட்சிக் கீழ் வந்தமை தெளிவாகிறது.

இவனுடைய இரண்டு கல்வெட்டுக்களில் முதலாவது பிரான் மலைக் கோயிலில் இருந்த பரதேசி ஆண்டார்களில் திருநட்டப் பெருமாள் பிள்ளைகளில் ஒருவரான எதிரில்லாப் பெருமாள் மற்றும் செயமுடைய பெருமாளான திருநீறணிவான் என்பார் பிரான் மலை நாயனார்க்குப் பித்தளை விளக்கொன்றும் விளக்குக்கான நெய்க்காக 50 ஆடுகளும் வழங்கியமை புலனாகிறது. மற்றொரு கல்வெட்டால் மதுரையில் திருஞான சம்பந்தர் பெயரில் ஒரு மடம் இருந்தமையும் அம்மடத்தைச் சேர்ந்த அறப்பெருஞ் செல்வியார் எனும் பெண்மணி பிரான் மலை நாயனார்க்கு ஒரு

---

[2] ***ARE 505/1922***

[3]பாண்டியர் தலைநகரமாகப் பொன்னமராவதி திகழ்ந்தமையைத் தமிழக வரலாற்றாசிரியர் பலரும் விரித்துக் கூறவில்லை.

[4] ***ARE 47/1938***

[5]திருப்பாலைக்குடி ***ARE 322/1928***

---

நந்தா விளக் கெரிக்க 50 ஆடுகளையும் ஒரு பித்தளை விளக்கொன்றையும அளித்தமை புலனாகிறது. சைவ மடத்தில் பெண் ஒருவரும் இருந்தமை புதிய செய்தி.

அடுத்து வருவன இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் கல் வெட்டுக்கள் (11-14). இவனது "பூமலர்த் திருவும்" எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி 2 பகுதிகளாகக் கிடைத்துள்ளது. பிற கல்வெட்டுக்களில் இவனது ஆட்சியாண்டு 8+1+1 முதல் ஆட்சியாண்டு 10 வரையிலான கொடைகள் கூறப்பட்டுள்ளன. இவற்றில் ஆர்யா வர்த்தத்துக் கோளகி மடத் துறவிகளுக்குத் தரப்பட்ட கொடைகள் விவரிக்கப்பட்டுள்ளன. ஆர்யாவர்த்தம் என்பது வடக்கே கங்கை யமுனை ஆறுகளை ஒட்டிய பகுதிகளைக் குறிக்கும் எனப் பௌதாயன தர்மசூத்திரம் கூறுகிறது[6]. கோளகி மடம் என்பது இன்றைய மத்தியப் பிரதேசம் பகுதியில் பொஆ 10ஆம் நூற்றாண்டு வாக்கில் துவங்கியது. வட்ட வடிவில் அமைந்திருந்ததால் இந்த மடம் கோளகி மடம் எனப்பட்டது[7]. இதில் ஒரு பிரிவினர் தென்னாடு போந்தனர். பாண்டிய மன்னர்களின் ஆதரவுடன் மடங்கள் அமைத்தனர். இதனால் இவை தக்ஷிண

கோளகி மடம் எனப் பெயர் பெற்றன. இதிலும் பிரிவுகள் உண்டு. திருவாரூர், பிரான் மலை போன்ற மடங்களில் இருந்தவை லக்ஷாத்யாயி எனும் பிரிவினைச் சார்ந்தவை. ஒரு லட்சம் ஸ்லோகங்கள்/மந்திரங்கள் செபித்ததால் உண்டான பெயராக இருக்கலாம். இங்கு உறைந்த துறவிகள் சிவா/இராவளர் எனும் இறுதிப் பெயர்களோடு விளங்கியமை பிரான்மலை மற்றும் பாண்டியர் கல் வெட்டுக்களால் தெரிய வருகின்றது. பிரான் மலையில் இருந்த மடத்தி ற்குப் பார்வதி மடம் என்ற பெயரும் விளங்கியமை கல்வெட்டுக்களால் தெரிய வருகின்றது. பார்வதி சிவபெருமானின் மனைவியைக் குறிக்கும். பெண் பெயரில் மடம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இது போலவே மதுரையில் அமைந்திருந்த திருநாவுக்கரசர் திருமடத்தில் அறப்பெருஞ்செல்வியார் என்ற பெண் துறவி இருந்தமையும் மற்றொரு கல்வெட்டால் தெரிய வருகிறது. சமண பௌத்த மடங்களில் பெண் துறவிகள் இருந்தமை நாம் அறிந்ததே. ஆனால் சைவ மடத்தில் பெண் துறவி இருந்தமை குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

அடுத்து வருவன பெருஞ் சதிர குபேரன் என்பவரின் கல்வெட்டுக்கள். (15-16) இவ்விரு கல்வெட்டுக்களில் பிரான் மலைமே லும் அடிவாரத்திலும் தான் செய்த திருப்பணிகள் பற்றி விளக்கியுள்ளார். இவற்றில் அரசன் பெயரேதுமில்லை. ஆனால் ஒரு கல்வெட்டில் பாண்டிய மன்னன் வீர பாண்டியனின் அதிகாரி போலச் சித்திரிக்கப்பட்டுள்ளார். கல்வெட்டு எண் 17 பார்க்க, வீர பாண்டியன் ஆட்சிக்கு வருமுன் இப்பகுதி யில் ஒரு சிற்றரசன் போல இருந்தார் போலும்.

அடுத்து வருவன முதலாம் சடையவர்மன் வீரபாண்டியனின் கல் வெட்டுக்கள். இப்பாண்டிய மன்னன் பொஆ 1253 முதல் பொஆ 1283வரை ஆண்டவன். இவனது கல்வெட்டுக்கள் அழகர்

---

[6] 1.1.2.11

[7]பார்க்க - *Sears I Tamara, Worldly Gurus and Spiritual Kings - Architecture and Asceticism in Medieval Inida, Yale University Press, New Haven & London, 2014 P. 25;* கோளகி மடத்தின் தோற்றம் பற்றிப் பார்க்க : *Sears Tamara (2014) Worldly Gurus and Spiritual Kings. Architecture and Asceticism in Medieval Inida, New Haven, Connecticut: Yale University Press,* தமிழகத்தில் கோளகி மடங்கள் பற்றிப் பார்க்க : *Golaki School of Saivism in the Tamil Country, B G L Swamy in Journal of Indian History, Vol.LIII April 1975; Edited by Dr. T.K. Ravindran Published by The Department of History, University of Kerala.*

---

கோயில், இலவானாசூர் போன்ற இடங்களிலும் கிடைத்துள்ளன. இங்குக் காணப்படுவன அவனுடைய 9,11ஆம் ஆட்சி யாண்டுகளைச் சேர்ந்தன. ஆனால் 11ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டு இக்கோயிலில் எங்கும் காணப்படவில்லை. பல ஆண்டுக்குக்கு முன்இக்கோயிலில் ஆய்வு மேற்கொண்ட கரந்தை, கோவிந்தராசனார் இதனைப் படியெடுத்து ஆதீனத்திற்கு அளித்துள்ளார். அந்தப் படியே இங்குத் தரப்பட்டுள்ளது.

அடுத்து வருவது பாண்டிய மன்னன் இரண்டாம் மாறவர்மன் விக்கிரம பாண்டியன் காலத்தது. பொஆ 1250முதல் பொஆ 1265 வரை ஆண்டவன். "ஸமஸ்த புவனேக வீர" எனத் தொடங்கும் வட மொழி மெய்க்கீர்த்தி இவனுக்குண்டு. இது இவனுடைய இரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் உள்ளது. இதில் இவன் பெற்ற வெற்றிகள் கூறப்பட்டுள்ளன. சோழர், இலங்கை மன்னர், கருநாடக மன்னன் சோமேசுவரன், சாளுக்கிய ம ன்னர் சேமர், தெலுங்கு மன்னன் வீர கண்ட கோபாலன், கோப்பெருஞ் சிங்கன், காகதீய மன்னன் கணபதி ஆகியோரை வென்றதாக மெய்க்கீர்த்தி குறிப்பிடுகிறது. இவனுடைய தம்பியே முதலாம் சடைய வர்மன் சுந்தரபாண்டியன் (பொஆ1250-1284) இவனுடைய மெய்க்கீர்த்தி "ஸமஸ்த ஜக$^{3}$தா$^{3}$தா$^{4}$ர" எனத் தொடங்கும். அடுத்து வருவன முதலாம்சடையவர்மன்சுந்தரபாண்டியன் கல்வெட்டுக்கள் (21-23) கல்வெட்டில் தன் அண்ணன் சடையவர்மன் இரண்டாம் குலசேகரனை அண்ணாழ்வி எனக் குறிப்பிடுகிறான்.

இக்கோயிலில் காணப்படும் அதிகமான கல்வெட்டுக்கள் முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் காலத்தவை. இவனுடைய 13ஆம் ஆண்டு முதல் 40ஆம் ஆட்சியாண்டு வரையிலான கல்வெட்டுக்கள் (24-39) மொத்தம் 16 கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இவனுடைய மெய்க்கீர்த்தி "தேர்போல் அல்குல்" என்ற தொடருடன் தொடங்கும். இதில்"மலை நாடும் சோணாடும் இருகொங்கமும் ஈழமும் தொண்டை மண்டலமும் கொண்டருளியவன்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது[8] இம் மெய்க் கீர்த்தி இங்குள்ள கல்வெட்டுக்களில் காணப்படாமை வியப்பைத் தருகிறது. மாறாக "எம்ம ண்டலமுங் கொண்டருளிய" என்ற பட்டம் காணப்படுகிறது. உண்மையில் இப்பட்டம் இவனுடைய தந்தையான முதலாம் சடையவர்மன் சுந்தரனின் பட்டப் பெயரேயாகும்.

அடுத்து நாம் காண்பது முதலாம் சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் கல்வெட்டாகும். (40)

இவனுக்கு "வாளால் வழி திறந்தான்" என்ற பட்டம் உண்டு. திருக்கோவிலூர் வட்டம், நகர் எனும் ஊரில் காணப்படும் கல்வெட்டு இவனை "ஸ்வஸ்தி ஸ்ரீ வாளால் வழி திறந்த பெருமாள் பராக்கிரம பாண்டியன்" எனக் குறிப்பிடுகிறது. [9]தமிழகத்தின் மீது படையெடுத்து வந்த குஸ்ரு கானை விரட்டியதால் இப்பட்டத்தை மேற்கொண்டுள்ளான். இவன் பெயரில் "வாளால் வழி திறந்தான் பணம்" எனும் காசும் வழக்கில் இருந்தது.[10] பொஆ 1323இல் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தின் தெற்குக் கோபுரம் இவன் கட்டியதே. அங்குக் காணப்படும் கல் வெட்டில்" வாளால் வழி திறந்து வையம் தொழ நின்ற பெருமாள்" என்ற பட்டப் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இவன்

---

[8]சேர்மாதேவி *ARE 698/1916;* ஆட்சியாண்டு 14

[9]நகர் *ARE 303/1910*

[10]புதுக்கோட்டை, குளத்தூர் வட்டம், ஆரியூர் அருகில் உள்ள பாறையில்:- பார்க்க புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுக்கள் எண். 622.

---

புகழ் பாடும் சில பாடல்கள் மீனாட்சி அம்மன் கருவறைக்கு எதிரே உள்ள நுழை வாயிலில் காணப்படுகின்றன.[11]

அடுத்துப் பெயரின்றியும் ஆட்சியாண்டு போன்ற விவரங்கள் இன்றியும் சில கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவை யாருடைய கல்வெட்டுக்களாக இருக்கக் கூடும் என்ற விளக்கங்கள் அந்தந்த கல்வெட்டுக்களின் முற்பகுதிகளில் தரப்பட்டுள்ளன. இவை குறித்து மேலும் ஆராய வேண்டும்.

**விசய நகர மன்னர்**

தக்காணத்தில் துக்ளக் ஆட்சியை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றவுடன் தொடங்கியது விசய நகர மன்னர் ஆட்சி. ஏறத்தாழ நான்கு நூற்றாண்டுகள் வரை இவர்தம் ஆட்சி நிலவியது. இவர்கள் ஸங்கம, சாளுவ, துளுவ, ஆரவீடு எனும் குல மரபுகளைச் சேர்ந்தவராவர். விசய நகர அரசைத் தொடங்கி

வைத்தவர்கள் அரிகரன், புக்கன் எனும் இரு சகோதரர்கள். இவர்கள் காகதீய மற்றும் கம்பிலி மன்னர்களின் கீழ்ப் பணியாற்றியவர்கள். இவர்களது ஆட்சி பொஆ 1336இல் தொடங்கியது. இவர்கள் ஸங்கம எனும் குல மரபினைச் சேர்ந்தவர்கள். இவர்களுள் புக்கன் மகன் கம்பணன் மதுரையை ஆண்டு வந்த சுல்தானின் ஆட்சியைப் பொஆ 1370இல் அகற்றினான்.

பிரான்மலைக் கல்வெட்டுக்களில் காணப்படும் விசய நகர மன்னர்தம் கல்வெட்டுக்களில் முதலாவதாகக் காணப்படுவன ஸங்கம மரபினைச் சேர்ந்த இரண்டாம் தேவராயரின் கல்வெட்டுக்கள். இவை பொஆ 1438ஐச் சேர்ந்தவை. முதலாம் கல்வெட்டு இவ்வரசரின் படைத்தலைவர்கள் தந்த கொடைகள் பற்றித் தெரிவிக்கின்றன. இரண்டாவது இக்கோயிலில் சைவாசார்யப் பணி புரியும் சோமணா அய்யனுக்கு அளித்த இறையிலி ஊர் பற்றித் தெரிவிக்கிறது. மூன்றாவது இவ்வரசரின் பொறுப்பாளராகப் பணியாற்றிய ஏப்புலி நாயக்கர் காலத்தவை.

அடுத்து வருவன இம்மடி இரண்டாம் நரசிம்ம ராயரின் காலத்துக் கல்வெட்டுக்கள். இவர் சாளுவ மரபினர். இவை பொஆ 1478ச் சாந்தன. இவற்றுள் முதலாவது இவ்வரசரின் பொறுப்பாளரான நாரண நாயக்கரின் நிவந்தம் பற்றிய செய்தி உள்ளது. மேலும் சில கல்வெட்டுக்கள் இவ்வூரில் வந்து தங்கியிருந்த ஆர்யாவர்த்தந்து கோளகி மடத் துறவிகட்கு வழங்கிய கொடைகள் பற்றித் தெரிவிக்கின்றன. (கோளகி மடம் பற்றி அடிக் குறிப்பு 7 ஐப் பார்க்க.)

அடுத்துக் காணப்படுவன துளுவ மரபினைச் சார்ந்த புகழ்பெற்ற கிருஷ்ண தேவராயரின் மூன்று கல்வெட்டுக்கள். இவை பொஆ 1502-1510ஐச் சார்ந்தன. இவற்றுள் ஒன்று கிருஷ்ண தேவராயரின் கீழ் ஆட்சி புரிந்த அறந்தாங்கித் தொண்டைமான்களுள் ஒருவனான ஏகப் பெருமாள் தொண்டமானின் மகன் பொன்னம்பலங் காத்த தொண்டைமானின் கல்வெட்டு. இக் கல்வெட்டு முற்றுப் பெறா நிலையில் விவரங்கள் அறியக் கூடவில்லை. புலவர் செ. இராசு, ஏகப் பெருமாள் தொண்டைமானின் மூத்த மகனின் பெயரைப் பொன்னம்பல நாதன் எனக் குறிப்பிட்டுள்ளார். இவரே பின்னர் இவன் பெயர் பொன்னம்பலங் காத்த நாதர் எனவுங் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.[12] பிரான்மலைக் கல்வெட்டில் இவன் பெயர் ஏகப் பெருமாள் தொண்டைமான் புத்திரந் பொன்னம்பலங் காத்தான் எனக் காணப்படுகிறது. மேலும் ஏகப் பெருமாள் தொண்டைமானின் மெய்க் கீர்த்தி போலச் சில தொடர்களும் உள்ளன. (பார்க்க-கல்வெட்டு எண் 51)

---

[11] *ARE 7/1915, ARE 58/1915*

[12] அறந்தாங்கித் தொண்டைமான்கள் - உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை 2008 பக. 37, 41, 46.

---

இருவருக்குப் பின் ஆட்சிக்கு வந்தவர் விசய நகர மன்னர், துளுவ மரபினரான அச்சுத தேவ மகாராயர் ஆவர். இவர் காலத்தியனவாக 6 கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இவை பொஆ 1530 முதல் பொஆ 1539 ஆகியவற்றிற் கிடையிலானவை. இவற்றுட் சில இவரது பொறுப்பாளர்கள் பெயரில் அமைந்துள்ளன.

அடுத்துக் காணப்படுவன விசய நகர மன்னர் இரண்டாம் வேங்கடபதி மகாராயர் காலத்தவை. இவை பொஆ 1588, 1591, 1598ஐச் சார்ந்தவை.

அடுத்து மன்னர் பெயரேதுமில்லா நிலையில் காலக் குறிப்பு மட்டும் கொண்ட சில கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இவைகோயில் பண்டாரத்தாரே கல்வெட்டு



வெளியிட்டுள்ளமையைச் சுட்டுகின்றன. இவற்றுள் முதலாவது பொஆ 1643ஐச் சேர்ந்ததாகும். இரண்டாவதில் காலம் குறித்த பகுதியில் ரௌத்திர வருஷம் என மட்டும் காணப்படுகிறது. அடுத்த கல்வெட்டு அரசன் பெயரேதுமின்றிச் சக ஆண்டு 1661 என மட்டும் குறிப்பிடுகிறது. இது பொஆ 1739க்குச் சமமாகும். கல் வெட்டு இதனை அரசன் திருமுகமாகக் குறிப்பிடினும் அரசன் பெயரில்லை. இது போலவே அடுத்து வரும் கல்வெட்டும் அரசன் பெயரேதுமின்றி சகம் 14.. எனக் குறையுடன் உள்ளது. இதன் காலத்தைப் பொஆ 15../16... ஆகக் கொள்ளலாம். இது போலவே அடுத்து வரும் கல்வெட்டும் சகாப்தம் 15,2 சாதாரண வருடம் தை மீ 31ஆம் நாள் என்ற காலக் குறிப்புடன் உள்ளது.

அடுத்து வரும் கல்வெட்டு குன்றக்குடி ஆதீனகர்த்தராயிருந்த பொன்னம்பல தேசிகர் காலத்தில் நடந்த திருப்பணி பற்றிக் கூறுகிறது.

இதனைத் தொடர்ந்து தூண்களில் காணப்படும் சில கல்வெட்டுக்களில் வாசகங்கள் தரப்பட்டுள்ளன. கோவிலைச் சுற்றியுள்ள ஊர்களில் வாழ்வோர் தாங்கள் பின்பற்றும் குருமார்களின் உருவச் சிலைகளைக் கோயிலில் அமைத்துள்ளதோடு அவர்தம் பெயரையும் பொறித்து வைத்துள்ளனர்.

மற்றொரு தூணில் மண்டபத்தைக் கட்டியவர் உருவங்களோடு அவர்களின் பெயர்களையும் பொறித்து வைத்துள்ளனர்.

தொடர்ந்து அடையாளம் காண முடியாத பல துண்டுக் கல்வெட்டுக்களின் வாசகங்கள் தரப்பட்டுள்ளன. பின்னால் யாரேனும் அடையாளம் காணக்கூடும் என்ற நிலையில் அவை இங்குத் தரப்பட்டுள்ளன. ஆக இதுவரை குன்றின் மீதுள்ள கோயில்களில் காணப்படும் கல்வெட்டுக்கள் அனைத்தும் (துண்டுக் கல்வெட்டுக்கள் உட்பட) ஒரு சேரத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

அடுத்துக் குன்றின் அடிவாரத்தில் சுப்பிரமணியர் கோயில் என்ற ஒரு கோயில் உள்ளது. இக்கோயிலின் காலம், கட்டியோர் போன்ற விவரங்கள் அறியக் கூடவில்லை. இங்கு மிக நீண்ட கல்வெட்டு ஒன்று உள்ளது. இது பதினெண் விஷயத்தார், திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர் எனும் வணிகக் குழுவினரின் கல்வெட்டாகும். இவ்வூரில் இறக்குமதி, ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு அவர்கள் தங்களுக்குள் பேசி முடிவு செய்த வரி விவரங்கள் இக் கல்வெட்டில் உள்ளன. எனவே திருக்கொடுங்குன்றம் ஒரு வணிகத் தலமாகத் திகழ்ந்தமை இதன் வழித் தெரிய வருகிறத. இக் கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டு இதனைப் பொஆ 13ஆம் நூற்றாண்டினதாகக் கொள்ளலாம். இதனைத் இந்தியத் தொல்லியல் கள ஆய்வுத் துறையினர் பொஆ 1903இல் படியெடுத்துள்ளனர். மேலும் இக் கல்வெட்டின் வாசகம் தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் தொகுதி 8இல் எண். 442 ஆகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இது மிக விரிவாக ஆராயப்பட வேண்டியதொரு கல்வெட்டாகும்.

இறுதியாகக் காணப்படும் கல் வெட்டு பிரான்மலை ஊருக்குள் இருக்கும் பிள்ளையார் கோயில் கருவறைக்கு முன்புள்ள பலகைக் கல்லில் காணப்படுகிறது. இது மதுரை நாயக்க மன்னர் விஜயரங்க முத்து சொக்கநாதரின் கல்வெட்டாகும். காலம் பொஆ. 1711.

**ஐயன் மழுவராயர் 11 12 14**

சில கல்வெட்டுக்களில் "ஐயன் மழுவ ராயர் நமக்குச் சொன்னமையில்" என்று (கல்வெட்டு எண் 11,12,14) குறிப்பிடப்படுவதைக் காண்கிறோம். மழுவ ராயர் என்போர் தமிழகத்தின் தொல்குடிகளில் ஒரு பிரிவினர் ஆவர். அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் "மழவர் பெருமகன்" (புறநானூறு பாடல்கள் 88, 90) எனவும் "தலைநீர் நாடன்"

எனவும் குறிப்பிட்டுள்ளார். எனவே இவன் ஆண்ட பகுதி தலை நீர் நாடு எனத்

தெரிய வருகிறது. இப்பகுதி திருச்சிராப்பள்ளியைச் சுற்றிய பகுதி களாக இருக்கலாம். பாண்டிய மன்னன் இராசசிம்மன் பொஆ 770இல் மழகொங்கத்தை அடிப்படுத்தினான் என வேள்விக் குடிச் செப்பேடுகள் குறிக்கின்றன. இச்செப்பேட்டை வழங்கிய பாண்டிய மன்னன் பராந்தகன் நெடுஞ்சடையனின் தாய் மழவர் குடியினள் என்பது அதில் வரும் வடமொழிப் பகுதியால் தெரிய வருகிறது. சோழ மன்னன் கண்டராதி த்தன் மனைவி செம்பியன் மாதேவி மழவர் குடியினைச் சேர்ந்தவர். இவரைக் கல்வெட்டுக்கள் ஸ்ரீ உத்தம சோழரைத்திருவயிறு வாய்த்த மழவரையர் மகளார் பராந்தக மாதேவடிகளாரான செம்பியன் மகா தேவியார் எனக் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.[13] பிற்காலத்தே இவர்கள் பாண்டியர் முதலான அரசர்களின் கீழ்க் குறுநில அதிகாரிகளாக மாறினர் ஆகலாம். 'ஐயன் மழவராயர் நமக்குச் சொன்னமையில்' எனக் கல்வெட்டு குறிப்பதி லிருந்து இவர்கள் மன்னர் மதிக்கும் நிலையிலிருந்தமை புலனாகிறது. இக்குடியினர் பிற்காலத்தே சோழ பாண்டிய மன்னரது தலைமையை ஏற்றுச் சில பகுதிகளில் ஆள்பவராகவும் அரசர்க்குக் கீழ்ப்பட்ட அதிகாரிகளாகவும் மாறினர் ஆகலாம்.

**மாளவச் சக்கரவத்தி(கள்) 29 41**

மழவராயர்களைப் போலவே மாளவர் என்பாரும் அரசர்களின் கீழ் அதிகாரிகளாகச் செயல்பட்டு வந்தனர். இவர்களும் பாண்டிய நாட்டில் குறுநிலத் தலைவர்களாக விளங்கியவர்களே. தங்களைச் சக்கரவத்திகள் என அழைத்துக் கொள்வது இந்தப் பழைய நிலையைக் கருதிப்போலும். [14]இவர்களது இரண்டு கல்வெட்டுக்கள் இக்கோயிலில் உள்ளன.

அவற்றுள் ஒன்று மாளவச் சக்கரவத்திகள் ஓலை என்று தொடங்குகிறது. இது இவ்வதிகாரியினது அதிகார ஆற்றலைக் குறிக்கும் வகையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இனிக் கல்வெட்டுக்களால் அறியவரும் மற்ற செய்திகளைக் காணலாம்.

**கல்வெட்டுக்களில் ஊர்ப் பெயர்கள்**

பெரும்பான்மையான கல்வெட்டுக்களில் ஊரின் பெயர் திருக்கொடுங்குன்றம் என்றே உள்ளது. பொஆ 1500இல், விசய நகர மன்னரின் சார்பாக ஏப்புலி நாயக்கர் ஆளுகையின்

[13] *SII Vol. VIII No. 141*

[14] வெ. வேதாசலம், "மாளவச் சக்கரவர்த்திகள்" பேராசிரியர் பத்மநாதன் வாழ்த்து மலர், பவானி பதிப்பகம், புத்தூர், ஸ்ரீ லங்கா, 2004 பக் 136-140

போதுதான் பிராமலை என்ற பேச்சு வழக்குப் பெயர் காணப்படுகிறது. பின்னர் பொஆ 1711இல் நாயக்க மன்னர் விஜயரங்க முத்து சொக்கநாத நாயக்கரது கல்வெட்டில்தான் பிரான் மலை என்ற வழக்கு காணப்படுகிறது. ஆக அடிப்படையில் திருக்கொடுங்குன்றம் என்ற குன்றின் பெயரே ஊரின் பெயராகவும் ஆகியுள்ளமை தெளிவாகிறது. இருகல்வெட்டுக்களில் மட்டும் கடோறகிரி எனவும் கடோரகிரி எனவும் காணப்படுகிறது (9,60) இதனடிப் படையில் தற்போது இக்குன்றில் உக்கிரகிரி எனும் பெயரில் ஒரு கோயில் காணப்படுகிறது. கொடுங்குன்றம் என்பதை வடமொழியில் கடோரகிரி யெனவும் உக்கிர கிரி யெனவும் மொழிபெயர்த்தனர் போலும்.

**இறைவனின் பெயரும் கோயிலின் பெயரும்**

பெரும்பான்மையான கல்வெட்டுக்களில் இறைவனின் பெயர் திருமலை நாட்டுத் திருக்கொடுங்குன்ற முடையார் எனவும் திருக்கொடுங்குன்ற முடைய நாயனார் என்றும் திருக்கொடுங்குன்றத்து நாயனார் என்றும் கோயிலின் பெயர் திருக்கொடுங்குன்றமுடையார் கோயில் என்றும் திருக்கொடுங்குன்ற முடைய நாயனார் கோயிலென்றும் குறிக்கப்பட்டுள்ளன. நல்ல மங்கை பாகர் எனும் வழக்கு விசய நகர மன்னர் தேவராயர் காலத்தேதான் பொஆ (1468 இல்) காணப்படுகிறது. இங்கேயும் திருக்கொடுங்குன்றமுடைய நாயனார் என்றும் நல்ல மங்கை பாகர் என்றும் இரு பெயர்களில் குறிக்கப்படுவதைக் காண்கிறோம். இவ்வாறு வேறு படுத்திக் கூறுவதை நோக்கும்போது திருக்கொடுங்குன்றமுடைய நாயனார் என உக்கிரகிரிக் கோயிலுள் உள்ளவரையும் நல்ல மங்கை பாகரெனக் குகைக் கோயிலில் கோயிலிலுள்ளவரையும் வேறுபடுத்திக் காட்டுகின்றனரோ என எண்ணத் தோன்றுகிறது. எவ்வாறாயினும் நல்ல மங்கை பாகர் எனும் வழக்கு பொஆ 15ஆம் நூற்றாண்டில் தான் காணப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**கல்வெட்டுக்களால் அறியவரும் நாட்டுப் பிரிவுகள்**

*எண்கள் கல்வெட்டு எண்களைக் குறிக்கும்.

**1. மண்டலம்**

1. காளி மண்டலம் 99
2. கொங்க மண்டலம் 99
3. செயங்கொண்டசோழ மண்டலம் 40
4. தொண்டை மண்டலம் 68
5. பாண்டி மண்டலம் 42, 43, 60, பாண்ட்ய மண்டலம் 55
6. மலை மண்டலம் 99

**2. சீர்மை**

1. பிராமலைச் சீர்மை 45 49
2. புதுக்கோட்டை சீர்மை 43

**3. வள நாடு**

1. இலங்கை கொண்ட சோழ வள நாடு 23, 99
2. (ஐய)பொழில் வள நாடு 99
3. கடலடையாது இலங்கை கொண்ட வள நாடு 23 38 99
4. கேரள சிங்க வள நாடு 17 18 26 45 55 57 61 79 85 88 99
5. சோழ பாண்டிய வள நாடு 8, 41 52 60
6. சோழன் வள நாடு 50
7. மதுரோதய வள நாடு 12, 76
8. விக்ரமராம வள நாடு 12 13 14

**4. கூற்றம்**

1. அரும்பொற் கூற்றம் 14
2. உறத்தூர் கூற்றம் 99
3. ஒல்லையூர் கூற்றம் 89
4. சிங்கக்கூற்றம் 76
5. முத்தூற்று கூற்றம் 23
6. கீழ் கூற்றம் 88

**5. நாடு**

1. அஞ்சுநிலை நாடு 61
2. அண்ட நாடு 14
3. (அ) வனி(ச்சூ) ளாமணி நாடு 99
4. இராஜராஜபாண்டி நாடு 3
5. கல்வாயில்நாடு 99
6. களக்குடி நாடு 25
7. களவழி நாடு 99
8. கான நாடு 39 80 86 99
9. கானூர்நாடு 87
10. கீழ் மங்கல நாடு 46
11. கீழ் வெம்ப நாடு 29 32 93
12. கோ நாடு 89
13. சுரபி நாடு 1 33 34 43
14. செவ்விருக்கை நாடு 12
15. தாழையூர் நாடு 46
16. திருங்குடி நாடு 90
17. திருமலை நாடு 6 7 13 17 19 23 25 26 29 31 32 35 37 40 42 43 44 48

49 50 52 54 55 58 60 64 65 66 67 68 83 99
18. திருமல்லி நாடு 12
19. துவராபதி நாடு 2 53 62 99
20. தென்கோ நாடு 23 40
21. தொண்டை நாடு 99
22. பறப்பு நாடு 39
23. பாம்புணி நாடு 99
24. பாண்டி நாடு / பாண்ட்ய நாடு 3 18 44 55 67
25. புறமலை நாடு 12 14 47 99
26. பொன்னமராபதி நாடு 43
27. பொள்ள நாடு 99
28. பொன்(னி) நாடு 99
29. போழகார நாடு 28
30. மகருங்குடி நாடு 13
31. மருங்கூர் நாடு 35 36 37
32. மண்ணி நாடு 99
33. முட்டாவாள் நாடு 40
34. முத்தூற்றுக் கூற்றநாடு 23
35. மேற்றலை நாடு 12
36. வட பறம்பு / பறப்புநாடு 22 95
37. வெம்ப நாடு 29 32 93

**6. பற்று / பற்றில்**

1. அறநூற்றுவனேரிப் பற்று 3334
2. இராயம்பலப் பற்று 46 (யிராயம்பலப் பற்றில்)
3. எந்திரப் பற்று 48
4. எறிபடை நல்லூர்ப் பற்று 12
5. கிளிப்பற்று 99
6. சூரைக்குடிப் பற்று 8
7. சோழ பாண்டிய நிலைப் பற்று 8
8. திருக் காய்குடிப் பற்று 33 34 (தருக்காய் குடி பற்றில்)
9. திருக்கொடுங்குன்றப் பற்று 54 66
10. நயம் பற்று 9
11. பாக்குடிப் பற்று 22 95
12. பிரையூர் பற்று 55
13. மேல்மலைப் பற்று 53
14. விருப்பாக்ஷி பற்று 47

**7. கீழ்**

1. இராச சிங்கன் குளக் கீழ் 22
2. புதப் பேர்க் குளத்து 14
3. மாடக் குளக் கீழ் 12 22

**8. ஊர்**

1. ...ங்கம்பூர் 67
2. அருவியூர் 18 64
3. இடையாற்றூர் 23
4. இரணியூர் 31
5. ஒதியனூர் 1
6. ஒல்லையூர் 89
7. கருமையூர் 61
8. காரையூர் 40
9. காவலூர் 98
10. காவனூர் 77
11. கானூர் 44 87 88
12. கூடலூர் 45
13. கீழை கூடலூர் 44
14. கோவலூர் 26 99
15. சிறுதை ஊர் 60
16. தாழையூர் 46
17. திருக் கோட்டியூர் 50 99
18. நாலூர் 47
19. பிரையூர் 55
20. பெருமணலூர் 14
21. மட்டியூர் 30 46 59 61
22. மடத்தூர் 55
23. மணலூர் 47
24. மருங்கூர் 35 36
25. முசுண்டை (கானூர் முசுண்டை)
26. மேலூர் 50 52
27. மேலைக் கூடலூர் 44 48

**நல்லூர்**

1. எறிபடை நல்லூர் 1 2 99
2. கிழான் நல்லூர் 40
3. சக்ரபாணி நல்லூர் 12 14
4. சீ மல்லவ நல்லூர் 7
5. திரு வெண்காவுடையா நல்லூர் 8
6. திருக் கொடுங்குன்ற நல்லூர் 22
7. பெருங்க... நல்லூர் 46
8. மானபூஷண நல்லூர் 93
9. முடி தாங்கி நல்லூர் 28
10. முதலி நாயக நல்லூர் 8
11. யோகினும் பிரியாத நல்லூர் 22
12. வாணராய நல்லூர் 9
13. விக்கிரம பாண்டிய நல்லூர் 50 61
14. வீர பாண்டிய நல்லூர் 13 61
15. வெண்ணை நல்லூர் 99

**மங்கலம்**

1. அஞ்ஞற்றுவ / ஐஞ்ஞற்றுவ மங்கலம் 40
2. அமர்த மங்கலம் 8
3. கண்ண மங்கலம் 8
4. கீழ்சேந்த மங்கலம் 50
5. கீழ் மங்கலம் 46
6. கொத்த மங்கலம் 62
7. கொற்ற மங்கலம் 33 34
8. சொக்க மங்கலம் 99
9. தேவி மங்கலம் 35 36
10. நாட/டா மங்கலம் 12 13 14
11. பூதமங்கலம் 99
12. மீயாற்று மங்கலம் 30

**சதுர் வேதி மங்கலம்**

1. அம்பலத்தாடிச் சதுர்வேதி மங்கலம் 45
2. சுந்தர பாண்டியச் சதுர்வேதி மங்கலம் 47
3. சுந்தர ராசச் சதுர்வேதி மங்கலம் 77
4. நிறுபசே2கர சதுர்வேதி மங்கலம் 54 55
5. மாளுவ தங்கச் சதுர்வேதி மங்கலம் 46

**புரம்**

1. இராச வல்லி புரம் 32 93
2. கரவந்த புரம் 25
3. கருவூர் கண்ண புரம் 99
4. செழிய நாராயண புரம் 15 16 17 99
5. சேர நாராயண புரம் 99
6. தவனப்பெருமாள் சுந்தர பாண்டிய புரம் 99
7. திப்பராய புரம் 45 46 47
8. தெலுங்க குலகால புரம் 38
9. நிலைப் புரம் 8
10. மடப் புரம் 13 14 35 55 67
11. ராசவல்ல புரம் 29
12. ஜயங்கொண்டசோழ புரம் 99

**புரி**

1. அளகா புரி 15 16 17
2. வீரபுரி 20

**பெருந் தெரு**

1. தாதர் காளையர் கா(வு)ப் பெருந்தெரு 99
2. திருக் காமக் கோட்டப் பெருந்தெரு 12 13 14
3. திருக்கொடுங்குன்றமுடை.... ரட்டப் பெருந்தெரு 14
4. மண்டலிகன் கெம்பீரப் பெருந்தெரு 99
5. ஜயங்கொண்டசோழப் பெருந்தெரு 99

**பட்டணம் / பட்டினம்**

1. குலசேகர பட்டணம் 18 57 ~ குலைசேகர பட்டினம் 26 99

**மாநகர்**

அருவி மானகர் 99
கொடும்பை மாநகர் (மானகர்) 61

**பாக்கம்**

1. அரிசிப் பாக்கம் 99
2. நெற் பாக்கம் 99
3. பயற்றம் பாக்கம் 99
4. .....யூர் பாக்கம் 59

**குடி**

1. அருவிக் குடி 39 95
2. ஆதியார் குடி 28
3. ஆதினாயகற் குடி 38
4. இளையாத்தக் குடி 31
5. உழக்குடி 16 76
6. களக்குடி 25
7. கறைய்குடி 9
8. காச்சுவக் குடி 91
9. கீழை யிளவாத்தக் குடி 50
10. குமத்தக் குடி 50
11. குன்றக் குடி 71
12. கொல்லி குடி 22 50
13. சூரைக் குடி 8 50
14. திருக்காய் குடி / தருக்காய் குடி 33
15. திருங் குடி 90
16. பாக் குடி 22 95
17. பாண்டியர் குடி 62

18. பூதி குடி 41
19. பெருங் குடி 32
20. மகருங் குடி 13
21. மலைக் குடி 95
22. மேலை யிளவாத்தக் குடி 50
23. வல்லாண்டியர் குடி 31
24. விசையன் குடி 90
25. வேடங் குடி 50

**தெரு**

1. தமிழகோனார் புதுத் தெரு 99
2. திரு...ருந்தெரு 12
3. புதுத்தெரு 99
4. மட விளாகத் தெரு 54

**குடிக்காடு**

1. குடிக் காடு 50
2. சேந்த குடிக் காடு 62

**கிரி**

1. க(டோர) கிரி / கடோறகிரி 7 48 66
2. விருப்பராய கிரி 46

**குறிச்சி**

ஊர் மன்னு குறிச்சி 35 36

**நிலை**

1. அஞ்சு நிலை 61
2. நிலைப்புறம் 8
3. வேள குலார் நிலை 61

**ஊர்களின் பழைய பெயர்களும் புதிய பெயர்களும்**

....டை ஆன கீழைக் கூடலூர் 44
அந்தனூரா...க ...ம்பூரு...23
அமர்த மங்கல மான முதலி நாயக நல்லூர் 8
அருவி மாநகர மான குலசேகரப் பட்டினம் 99
அருவியூரான குலசேகர பட்டணத்து 18
அளகாபுரியான செழிய நாராயணபுரம் 15 16 17
அளகாபுரமான செழிய நாராயண புரம் 99
அளகை மானகரமான
ஐயங்கொண்ட சோழப் பெருந் தெரு 99
கண்ண மங்கல மான திரு வெண்கா வுடையா நல்லூர் 8
களக்குடியான கரவந்தபுரம் 25
கறைக்குடி யான வாணராய நல்லூர் 9
கூடலூரான ஐஞ்நூற்றுவ மங்கலம் 40
கொடுமடையான கருமையூர் 61
கொல்லி குடியான திருக்கொடுங்குன்ற நல்லூர் 22
திருக்கொடுங் குன்ற மான தேடவண் கயிலாயம் சிறீ கடோறகிரி 48
திருக்கொடுங்குன்ற மான த3க்ஷி ண கயிலாஸம் 55
தென் வரம்பி யான திப்பராச புரம் 45
புதுக்குளமான தேனிற் போல மொழி னல்லூரும் 22
புதுத்தெருவான சேர நாராயணபுரம் 99
புல்லூற்றியான சீ மல்லவ நல்லூர் 7
பூலாங் குளமான திப்பரச புரம் 46
மழிறையான விக்கிரம பாண்டிய நல்லூர் 61
வடவரம்பி திப்ப...49
விருப்பராயகிரியான யிராயம்பலப் பற்று 46
வெட்சியூரான மும்முடி சோ...95
வேங்கைக் குளமான திருப்பராய புரம் 47
வேள குலார் நிலையான வீரபாண்டிய நல்லூர் 61

**சபை**

ந்ரிபசேகரச் சதுர்வேதி மங்கலத்து சபை 54

**நீர் நிலைகள்**

**ஆறு**

1. வழிசிலை யாறு 30 44
2. வெள்ளயாறு 140

**ஏரி**

1. அறுநூற்றுவன் ஏரி 34 42
2. செருமந்த னேரி 41
3. பரமநேரி 50
4. பேரேரி 35

**ஊருணி**

1. நல்ல பாகற் ஊறணி 54
2. ....ப்பா ஊறணி 67

**குளம்**

1. ...ண்ணக் குளம் 48
2. அல்லி குளம் 54
3. கடம்பங் குளம் 65
4. கருங்காலிக் குரிச்சிக் குளம் 39
5. கானூர் முசுண்டை ஊர் குளம் 43
6. கூடலூர் குளம் 45
7. செட்டி குளம் 65
8. நாயக்கர் குளம் 66
9. பிணரிக் குளம் 36
10. புதுக்குளம் 22
11. புதுப்பேர்க் (புதப்பேர்க்) குளம் 14
12. பூண்டிக் குளம் 30
13. பூலாங் குளம் 46
14. மட்டியூர் மேலைக்குளம் 30 46
15. மாடக் குளம் 12 22
16. முற்க் குளம் 57
17. மேலூர்க்குளம் 41
18. மேலைக் குளம் 30
19. வேங்கைக் குளம் 46
20. வேப்பங்(வேப்பங்) குளம் 46

**புரவு (நீர்நிலை)**

1. கீழ் சேந்த மங்கலப் புரவு 50
2. சூரைக்குடி புரவு 50
3. திரு மெஞ்ஞான புரவு 50
4. திருக் கோட்டியூர் புரவு 50
6. விக்கிரம நல்லூரின் முறையிற் புரவு 50

**ஏம்பல்**

1. ஆகக் குடிக்காடு ஏம்பல் 50
2. ஆண்டி ஏம்பல் 50
3. உட்கிடை ஏம்பல் 50
4. கீழை யிலவாத்தக்குடி ஏம்பல் 50
5. குமத்தக் குடி ஏம்பல் 50
6. குறுவ னேரி ஏம்பல் 50
7. கொல்லன் குண்டு ஆன ஏம்பல் 65
8. கொல்லி குடி ஏம்பல் 50
9. சடைய னேம்பல் 50
10. சிறு குமி ழேம்பல் 50
11. தண்டு தான ஏம்பல் 50
12. தண்டுணி ஏம்பல் 50
13. தம்பி ஏம்பல்
14. திப்பராசபுரம் ஏம்பல் 45
15. பெரிய குமிழி ஏம்பல் 50
16. மேலை யிள வாத்தக்குடி ஏம்பல்
17. வடிவளம்பி ஏம்பல் 65

**ஏந்தல்**

1. செட்டியார் ஏந்தல் 54
2. மட்டியூர் ஏந்தல் 59
3. வண்ணனான் ஏந்தல் 60

**மடை**

கொடுமடை 61

**விகுதிகளின்றி வரும் ஊர்ப் பெயர்கள்**

1. திருப் பூவணம் 22
2. கடோரம் 22
3. சிறீ கடோறி கிரி 50
4. சோழ மாதேவி 67
5. பாரிசுரம் 33
6. ஸ்ரீ மதுரை / 5 12 22 67 97 98 100

**வயல் பெயர்கள்**

1. கருவிலி மங்கை வயல் 50
2. குசவன் வயல் 66
3. கூகரன் வயல் 53
4. திரணி வயல் 50
5. நல்ல மங்கை வயல் 50
6. நெடு வயல் 73
7. புல்லேர் வயல் 62
8. பேரேரி வயல் 35
9. மேலூர் வயல் 50
10. வேடங்குடி வயல் 50

**நில அளவைக் கோல்கள்**

ஊரார் கோல் 41
குடி மலை ஆட்க் கோலால் 39
சுந்தர பாண்டியன் கோல் 8 41

## கல்வெட்டுக்கள் குறிப்பிடும் அதிகாரிகள்


...அருளாளனான சுந்தர பாண்டிய
வாணாத ரா...93
...கை நாட்டுச் சக்கரபாணிநல்லூர்
அரயன் விரத முடித்தானான பல்லவ
ராயன் 12
...டக்கும் பெருமாள் 18
...ண்ட வில்லி யான வத்த ராயன்
88
...ம்படைக் கார...சந்தவி...த்தான் 13
அச்சுதராய நாயக்க ரவகள்
காரியத்துக்குக் கடவர் கச வண்ண
நாயக்கர் 58
அச்சுத ராயர் மகாராயர்
காரியத்துக்குக் கர்த்தர் இராமப்ப
நாயக்கர் 57
அண்ட நாட்டுப் பெரு
மணலூர் அரசன் முடி வழங்கும்
பெருமாளான விக்ரம பாண்டிய
உத்தர மந்திரி 14
அரும் பொற் கூற்றத்துப் புதப் பேர்க்
குளத்து ஆழ்வான் ஆண்ட
பிரான் அழகனான அழகிய
பாண்டிய விழுப்பரயன் 14
அளகாபுரியான செழிய
நாராயண புரத்து மணக்குடையான்
பொற்பதிக்கு நாயகர் திருவம்பலப்
பெருமாளான பெருஞ் சதிர
குபேரன் 15 16 17
ஆண்டா னல்ல மங்கை பாகன்
ஆலால...18
இளான்காடி உடையான் 35
ஏப்புலி நாயக்கர் 45 46 47 48 49 50
ஒருடையான் 24
களக்குடி நாட்டுக் களக்குடியான
கரவந்த புரத்துப் பிள்ளையார்
அழகப் பெருமாள் அகப்
பரிவாரத்து உலகளன்தான் அழகப்
பெருமாளான அவணி நாராயண
தேவன் 25
காரிய கர்த்தர் நாரண நாயக்கர் 48
